**சுருக்கம்**

கல்லூரிக் கல்வி – தமிழ்நாடு கல்லூரிக் கல்விப்பணி – கல்லூரிக் கல்வி இயக்குநர் பணியிடம் நிரப்புதல் – 2012–2013 ஆம் ஆண்டிற்கான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலுக்கு ஒப்புதல் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (எப்.1) துறை

அரசாணை (நிலை) எண்.135 நாள்.17.7.2012

ஆடி, 2

திருவள்ளுவர் ஆண்டு, 2043

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.440, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள்.26.10.1990
2. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதம் எண். 12626/ஜெ2/2012 நாள் 24.04.2012.
3. அரசாணை (நிலை) எண். 133, உயர்கல்வித் (எப்1), துறை, நாள் 16.07.2012.

----------

ஆணை:–

கல்லூரிக் கல்வி இயக்குநராகப் பணிபுரிந்த திருமதி. (முனைவர்) இரா.உமாராணி என்பவர் வயது முதிர்வின் காரணமாக 31.10.2011 அன்று பிற்பகல் ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடத்தை நிரப்புவது தொடர்பாக, கீழ்க்கண்ட கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள் அடங்கிய 2012–2013–ஆம் ஆண்டிற்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்குமாறு மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | பிறந்த தேதி / ஓய்வு பெறும் நாள் |
|---|---|---|
| 1. | Dr. R. பத்மினி<br>கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,<br>சென்னை மண்டலம்,<br>சென்னை. | 06.07.1954<br>31.07.2012 |
| 2 | Dr. T. செந்தமிழ்ச்செல்வி<br>கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் (நிதி),<br>கல்லூரிக் கல்வி இயக்குனரகம்,<br>சென்னை.6 | 16.04.1956<br>30.04.2014 |

2. மேற்காண் கல்லூரி கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. வரிசை எண் ஒன்றில் காணும் முனைவர் ஆர்.பத்மினி என்பவர் 31.07.2012 பிற்பகல் அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறவுள்ளதாலும், ஓராண்டிற்கும் குறைவான

பணிக்காலம் உள்ளதாலும், பார்வை ஒன்றில் காணும் அரசாணையின்படி, இவரின் பெயர் 2012–2013–ஆம் ஆண்டிற்கான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலில் சேர்க்கஇயலாது. 2012–2013–ஆம் ஆண்டிற்கான கல்லூரிக் கல்வி இயக்குநர் பதவிக்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் பின்வரும் நபரைச் சேர்த்து அரசு ஒப்புதல் அளித்து ஆணையிடுகிறது:–

Dr. T. செந்தமிழ்ச்செல்வி
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் (நிதி),
கல்லூரிக் கல்வி இயக்குனரகம்,
சென்னை.

3. இவ்வாணையினை கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் அனைவரும் அறியும்படி அறிவிக்கை செய்யவும், மேலும், முனைவர் T. செந்தமிழ்ச்செல்வி அவர்களைவிட பணியில் முதுநிலையில் உள்ள கல்லூரிக் கல்வி இணை இயக்குநருக்கு பதிவுஅஞ்சலில் அனுப்புமாறும், இதுதொடர்பாக, ஏதேனும் மேல்முறையீடு இருப்பின், இவ்வாணை வெளியிடப்பட்ட இரண்டு மாதங்களுக்குள் உரிய வழியாக அரசுக்கு சமர்பிக்கும்படி கல்லூரிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரி கல்வி இயக்குநர், சென்னை 6
Dr. T. செந்தமிழ்ச்செல்வி, கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் (நிதி),
கல்லூரிக் கல்வி இயக்குனரகம், சென்னை–6. (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
Dr. R. பத்மினி, கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், சென்னை மண்டலம், சென்னை.
<u>நகல்</u>
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.